2018 ஜனவரி 9]
3—

பேருந்து நிலையம்

***3863—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் உருவாக்கி, மறைந்தும் மறையாமலும், மக்கள் மனதில் வீற்றிருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை சிறப்பான முறையில் வழிநடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) *மற்றும்* (ஆ) *ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், அங்கு பேருந்து நிலையம் அமைக்க வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

திருமதி மு. சந்திரபிரபா: *"இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற பாடலுக்கேற்ப உயர்ந்த சிந்தனையோடும், உயர்ந்த எண்ணத்தோடும் (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்ந்து மறைந்தவர்கள் முன்னாள் முதல்வர்கள் பாரத ரத்னா டாக்டர்*

புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காக எண்ணற்ற நலத் திட்டங்களை வகுத்து, அதனைச் சிறப்பாகச் செயல்படுத்தி, ஒட்டுமொத்த தமிழக மக்களின் அன்பைப் பெற்றவர். இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்களின் மனதில் என்றென்றும் நீங்காமல், ஒவ்வொருவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா எனும் தெய்வத்தை (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கண் வணங்குகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச் சென்ற ஆட்சிப் பணியினைச் சிறப்பாக இணைந்து செயல்படுத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களுக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சியில் சுமார் 30,000 மக்கள் வசித்து வருகின்றனர். மம்சாபுரத்திலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் மற்றும் ராஜபாளையத்திலிருந்து மம்சாபுரத்திற்கும் அரசுப் பேருந்துகள் 9–ம், தனியார் பேருந்துகள் 4–ம், சுமார் 60 முறை இயக்கப்பட்டு வருகின்றன. அனைத்துப் பேருந்துகளும் சாலையிலேயே பயணிகளை இறக்கி விடுவதாலும், ஏற்றுவதாலும் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது. இங்கு போதிய இடவசதி உள்ளது. ஆதலால், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, மம்சாபுரம் பேரூராட்சி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மம்சாபுரத்தில் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

2018 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்*

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சியின் மக்கள்தொகை 19,363 ஆகும். இப்பேரூராட்சியானது ராஜபாளையம் நகராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இப்பேரூராட்சியின் வழியாக வேறு இடங்களுக்குச் செல்லக்கூடிய வழித்தடம் ஏதும் இல்லாததால், தினமும் ஸ்ரீவில்லிபுத்தூர் முதல் மம்சாபுரம் வரை மற்றும் மம்சாபுரம் முதல் ராஜபாளையம் வரையிலான வழித்தடத்தில் இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, இப்பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கப் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால், புதிய பேருந்து நிலையம் அமைக்க வழிவகையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, எப்படியாவது அங்கு ஒரு புதிய பேருந்து நிலையம் அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க போதுமான இடவசதி செய்து கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு*

முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாதவரம் தொகுதிக்குட்பட்ட ரெட்ஹில்ஸ், நாரவாரிக்குப்பம் பேரூராட்சியிலே ஒரு பேருந்து நிலையம் இருக்கின்றது. சுமார் 50 ஆயிரம் பேர் வந்து செல்கின்ற அந்தப் பேருந்து நிலையத்திற்கு மேற்கூரை இல்லை. மேற்கூரை இல்லாத காரணத்தினால், கோடைக்காலங்களிலும், மழைக்காலங்களிலும் பேருந்துகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகின்றார்கள். ஆகவே, அந்த இடத்திலே ஒரு மேற்கூரை–shelter அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 528 பேரூராட்சிகளிலே, ஒரு பேரூராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 211 பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்கள் பயன்பாட்டில் உள்ளன. இதில் ‘B’ வகை பேருந்து நிலையங்கள் 7–ம், ‘C’ வகை பேருந்து நிலையங்கள் 92–ம், ‘D’ வகை பேருந்து நிலையங்கள் 107–ம், வகைப்பாடு செய்யப்படாமல் 5 பேருந்து நிலையங்களும் உள்ளன. இதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் 69 பேருந்து நிலையங்கள் 51.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கத் திட்டமிடப்பட்டு, 63 பேருந்து நிலையங்களில் பணிகள் முடிவடைந்திருக்கின்றன; 6 பேருந்து நிலையங்களில் பணிகள் செய்யப்படவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பேருந்து நிலையத்தில் துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, அவசியம் ஏற்படின் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கின்றேன். மூலக்கரைப்பட்டியில் ஏறத்தாழ 50, 60 கிராம மக்கள் வந்து செல்கின்ற இடத்தில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். அங்கே கூனிக் குளம் என்று ஒரு குளம் குறுகித்தான் இருக்கிறது. அந்தக் குளத்தைச் சரி செய்து, அதிலே ஒரு பேருந்து நிலையம் அமைத்தால், அனைத்து மக்களும் அதிலே இளைப்பாறி, அவரவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்வார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கனிவோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லி, எங்களுக்கு அதை ஏற்பாடு செய்து கொடுத்தால் மட்டற்ற மகிழ்ச்சியடைவேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது அந்தக் குளத்தில் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதுபோன்று செய்வதற்கு வழிவகையோ, வாய்ப்புகளோ இல்லை. வேறு ஏதாவது இடத்தை ஆய்வு செய்து, அங்கே அவசியமிருப்பின் செய்யப்படும். அங்கே இருக்கக்கூடிய ஒரு குளத்தின் பெயரைச் சொன்னார். குளத்தில் அமைக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் தடையாணை இருக்கிற காரணத்தால், அமைக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, நீர்நிலைப் பகுதிகளில் அமைக்க முடியாது. அந்தக் குளம் ஊர்ப் பெயராக இருக்கிறபட்சத்தில், துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியில், மதுராந்தகம் நகராட்சி அலுவலகத்திற்குப் போதிய இட வசதி இல்லை என்று சொல்லி, மதுராந்தகம் நகராட்சிக்குட்பட்ட மாம்பாக்கம் பகுதியிலே, புதிய அலுவலகம் கட்டுவதற்கு துவக்க விழா, பூமி பூஜை நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு நானும் சென்று துவக்கி வைத்தேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர், நீங்கள் குற்றச்சாட்டு எல்லாம் சொல்ல வேண்டாம். நகராட்சி அலுவலகக் கட்டடம் வேண்டும் என்று கேளுங்கள். குற்றச்சாட்டு நீக்கப்படுகிறது.

திரு. சு. புகழேந்தி: அதற்குப் பின்னால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதே இடத்தில் நகராட்சி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளைத் துவக்கி வைத்து விட்டார்கள். ஆனால், இதுவரை வேலைகள் துவக்கப்படவில்லை. இன்னொன்று, நகராட்சியினுடைய ஆணையர் அங்கு நிரந்தரமாக இல்லை; எந்தவொரு பணியும் நடைபெறவில்லை. எனவே, இக்குறையைப் போக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடம் ஒரு சிறிய வேண்டுகோள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் என்னுடைய அறையில் வந்து இதையெல்லாம் பேசுங்கள்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜனவரி 9]

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைப் பொறுத்தவரையில், பேருந்து நிலையத்தைச் சீரமைப்பது குறித்த கேள்வி. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் நகராட்சிக் கட்டடத்தைப் பற்றிப் பேசினார். அவர் குறிப்பிட்ட இடத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மூலம் பூமி பூஜை போட்டிருப்பதால், கண்டிப்பாக கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. வெற்றிவேல், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

4—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***6227—திரு. ச. வெற்றிவேல்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, ஓமலூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஓமலூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. வெற்றிவேல் அவர்கள்.